செ.வெ.எண்: 37 நாள்: 27.04.2017

# அரியலூர் மாவட்டத்தில் கறவைப்பசுக்கள் மற்றும் வெள்ளாடு / செம்மறி ஆடுகளுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் அந்தந்த கால்நடை மருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட விலையில்லா கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்களில், தமிழகத்தில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக, ஒரு பயனாளிக்கு 4 வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வீதமும், கறவைப் பசுக்களும் 2011-12 முதல் 2016-17 வழங்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டம் முழுவதும் **28.04.2017 மற்றும் 29.04.2017** ஆகிய இருநாட்களில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு / செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் அந்தந்த கால்நடை மருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள், விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் பயன்பெறும் பயனாளிகள் தங்கள் கால்நடைகளை கொள்முதல் செய்த பிறகு நன்கு பராமரிக்க வேண்டும் என வலியுறுத்தி உள்ளார்கள். பயனாளிகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கால்நடைகளை சிறப்பாக பராமரித்த பயனாளிகளுக்கு ஆண்டுதோறும் தமிழ் புத்தாண்டு தினத்தில் பரிசுகளும் வழங்கப்பட்டு வருகிறது.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும் வெள்ளாடுகள் / செம்மறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு / செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் அந்தந்த கால்நடை மருத்தகத்தில் நடைபெற உள்ளது.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் / செம்மறிஆடுகள் வழங்கும் திட்டங்களின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் மட்டும் அல்லாமல் அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.